2025 ஜீலை  மாதம் 10 – ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர்    :   147/2021

2025–ஆம் ஆண்டு  ஜீலை மாதம் 10 – ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர் / எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW2, வது நபரின் வாக்குமூலம் (1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு, P.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | RW2 –அசோக் குமார் |
| தகப்பனார் பெயர்: | V.ஜெயமணி. |
| ஊர்: | புள்ளக்காபட்டி. |
| வட்டம்: | தேனி. |
| மாவட்டம்: | தேனி. |
| தொழில்: | ஓட்டுநர். |
| வயது : | 32. |

தேதி : 10.07.2025.

நான்காம் எதிர்மனுதார் தரப்பில் முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் நான்காம் எதிர்மனுதார் தரப்பு சாட்சி ஆவேன். நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் லோடு வண்டி ஓட்டி வந்தேன். கடந்த 2020 ஆம் வருடம் 9 வது மாதம் ஒரு நாள் இரவு 8.30 மணியளவில் உசிலம்பட்டியிலிருந்து ஆண்டிபட்டி செல்லும் வழியில் நான் TN 60 AF 5720 என்ற லாரியை ஓட்டி வந்தேன். அப்போது செட்டியபட்டி அருகே கணவாய்க்கு கீழே Tnstc பேருந்திற்கு பின்னால் நான் ஓட்டிசென்ற லாரி நின்றது.

TNSTC பேருந்துக்கு எதிரே TN 52 A 7758 டாரஸ் லாரி செங்கல் ஏற்றி கொண்டு வந்ததில் அந்த லாரியும், அரசு பேருந்தும் மோதி கொண்டன. அவ்வாறு மோதி கொண்டதில் அரசு பேருந்து கன்ட்ரோல் இல்லாமல் வந்து பின்னால் நின்று கொண்டிருந்த லாரி மீது மோதி விட்டது. இந்த விபத்து சம்பந்தமாக உசிலம்பட்டி தாலுகா கா.நிலையத்தில் TNSTC பேருந்து ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்தார்கள். TNSTC பேருந்து ஓட்டுநர் மீது தாக்கல செய்யப்பட்ட வழக்கில் என்னை ஒரு சாட்சியாக காட்டியுள்ளார்கள். நான் ஓட்டி சென்ற லாரியின் உரிமையாளர் இந்த மனுவில் ஒரு தரப்பினராக கட்சி சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது எ.த.சா.ஆ.1, எனது ஓட்டுநர் உரிமத்தின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது எ.த.சா.ஆ.2. இந்த விபத்திற்கு TNSTC பேருந்து ஓட்டுநர்தான் முழு காரணம் ஆவார்.

<u>**மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

இந்த விபத்தில் நான் ஓட்டி சென்ற லாரியும் சம்பந்தப்பட்டுள்ளதால் லாரி உரிமையாளரும், TNSTC நிறுவனமும் சேர்ந்து பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 10.07.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR

Digitally signed by SANKAR
Date: 2025.07.16 10:57:00 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி(FAC). தேனி.

10.07.2025